# சமூகத்தாக்க மதிப்பீடு இறுதி அறிக்கை, நிபுணர் குழுவின் பரிந்துரைகள் மற்றும் நில எடுப்பு அலுவலரின் அறிக்கை ஆகியவற்றை பரிசீலித்து மாவட்ட ஆட்சியர் அளிக்கும் அறிக்கை.

மறைந்த தமிழக முதல்வர் செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர்களின் வாழ்நாள் சாதனைகளை விளக்கும் விதமாகவும் அவரை பெருமைப்படுத்தும் விதமாகவும் அவர் வாழ்ந்து மறைந்த இல்லமான போயஸ் தோட்டத்தில் உள்ள வேதா இல்லத்தினை நில எடுப்பு செய்து அதனை அரசு நினைவு இல்லமாக மாற்றுவதற்கு தமிழ் நாடு அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்தது.

அதன்படி சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் பகுதி –1 கிராமம், பிளாக் எண். 31, டி.எண். 1567/50–ல் உள்ள 10 கிரவுண்டு, 322 சதுர அடி பரப்பளவு உள்ள வாழ்ந்த வீட்டினை உள்ளடக்கிய பகுதியினை 2013–ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துததில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிமறைவின்மைக்கும் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்கான உரிமை சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்து அதனை அரசு நினைவு இல்லமாக மாற்றுவதற்கு உரிய அரசாணையினை தமிழ் நாடு அரசு அரசாணை எண். 180, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நினைவில்லங்கள்) துறை நாள். 05.10.2017–ன் கீழ் உரிய ஆணையினை பிறப்பித்துள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரை இந்நில எடுப்பிற்கான உரிய அலுவலராக தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நில எடுப்புக் குறித்து சமூகத் தாக்க மதிப்பீடு செய்வதற்கான நிபந்தனைகள் Terms of Reference மாவட்ட ஆட்சியரால் 19.09.2018 அன்று கூடுதல் தலைமைச் செயலர்/நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் கடந்த 23.11.2018 தேதியன்று டாக்டர். ஏனோக் அவர்களுடைய தலைமையில் இயங்கும் குழு தகுதியின் அடிப்படையில் சமூகத் தாக்க மதிப்பீடு குறித்து ஆய்வு செய்யும் முகமையாகத் தெரிவு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

சமூகத் தாக்க மதிப்பீட்டுக்குழுவின் ஆய்வானது அளவு மற்றும் தரமான தரவுகள் சேகரித்தல், விரிவான புல தணிக்கை, கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துதல் மற்றும இதர தொடர்புடைய முறைகளை உள்ளடக்கியது.

இதற்கிடையில் நில எடுப்பு அலுவலரால் 12.11.2018 அன்று மேற்படி சட்டப்பிரிவு 12–ன் கீழ் முறையான அறிவிக்கை வெளியிடப்பட்டது.

சமூகத் தாக்க மதிப்பீடுக் குழு 05.12.2018 அன்று போயஸ் கார்டனில் குடியிருப்பவர்களுடனும், 08.12.2018 மற்றும் 11.12.2018 அன்று அப்பகுதி பொது மக்களிடமும் கலந்துரையாடல் (Focus Group Discussion) நடத்தப்பட்டது.

சமூகத் தாக்க மதிப்பீட்டுக்குழுவானது புல தணிக்கை, கருத்துக் கேட்புக் கூட்டம், நிலப்பரப்பு மற்றும் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு நடத்தி விரிவான அறிக்கை 14.12.2019 அன்று உரிய அரசு / மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தது.

மேற்படி சட்டப்பிரிவு 6(1) மற்றும் (2) மற்றும் விதி 11 (1) முதல் (7) மற்றும் 30–ன் படி சமூகத் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், வார்டு / மண்டல அலுவலகங்களில் 18.12.2018 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேலும், உரிய அரசு / மாவட்டஆட்சியர் அவர்களின் இணைய தளத்திலும் வெளியிடப்பட்டது.

மேற்படி சட்ட விதி 11 (1) மற்றும் (6)ன் கீழ் மதிப்பீட்டுக் குழுவின் அளிக்கையின் பேரில் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கான தேதி, நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டு 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டது.

மேற்படி சட்டத்தின் கீழ் சென்னை மாவட்ட ஆட்சியரால் 02.01.2019 அன்று பொது மக்கள் கருத்துக் கோட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பொது மக்கள் வாய்மொழியாகவும் மற்றும் எழுத்துப்பூர்வமாகவும் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் பதிவு செய்யப்பட்டன. இந்தக் கூட்டத்தில் 47 நபர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் தங்கள் கருத்துக்களையும் ஆட்சேபணைகளையும் விரிவாகவும் சுதந்திரமாகவும் வெளியிடுவதற்கு உரிய வாய்புகள் வழங்கப்பட்டன.

மேற்படி கருத்துக் கேட்புக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் அனைத்தும் கேட்புத்துறையான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (நினைவில்லங்கள்) துறையின் குறிப்புரைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (நினைவில்லங்கள்) துறை தனது குறிப்பான பதில் உரையை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்தது. இந்த குறிப்புரை சமூகத் தாக்க மதிப்பீடு செய்யும் முகமைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சமூகத் தாக்க மதிப்பீடு செய்யும் முகமை மேற்படி பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் அதன் பேரில் கேட்புத்துறை அளித்த பதில்உரைகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலித்தும் அது குறித்து விரிவான புல தணிக்கை செய்தும் கீழ்கண்டவாறு தனது சமூக மதிப்பீடு குறித்த இறுதி அறிக்கையினை அளித்தது.

கருத்து கேட்புக் கூட்டத்தில் பொதுமக்கள் பெரும்பான்மையாக போக்குவரத்து நெறிதல், வாகனம் நிறுத்துமிடம், அவசரகால மருத்துவ சேவைக்கான வசதிகள் முட்டுச்சந்தில் வாகனங்கள் வெளியேறாத நிலமை, பார்வையாளர்களுக்கு தேவைப்படும் போதுமான அடிப்படை வசதிகள் குடி தண்ணீர் ஆகியவை குறித்து கேள்விகள் எழுப்பியுள்ளனர்.

பொது மக்கள் எழுப்பியிருந்த பிற வினாக்களான போயஸ் கார்டனில் வசிக்கும் மக்களின் பொது அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் ஆக்கிரமிப்பு, நினைவு இல்லத்தினை வேறு இடத்திற்கு கொண்டு செல்லுதல், சிறுபான்மை மக்களின் கருத்துக்கள் கேட்கப்படாத நிலை சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த அச்சம், பொது மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துதல் ஆகியவையும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

மேற்கூறியவாறு பொதுமக்கள் எழுப்பியிருந்த பிரச்சனைகள் ஒவ்வொன்று குறித்தும் கேட்புத்துறையும் சமூக தாக்க மதிப்பீடு செய்யும் முகமையும் கீழ்கண்டவாறு தங்களது பரிந்துரைகளை அளித்துள்ளனர்.

**போக்குவரத்து நெரிசல், வாகனம் நிறுத்தும் வசதி, அவசரகால மருத்துவ சேவை மற்றும் முட்டுச்சந்துகள்**

(மேற்கூறிய பிரச்சனைகளை அனிதா அருண் குமார், ஆர்த்தி கிருஷ்ணா, சந்திரிகா, மாலா சரத் சந்திரா, கீதா ராஜா, ஜக்கி, கவிதா, ராம் சந்திர மணி, ஸ்மித்தா ஷா, சுந்தரேசன், சேபா ராவ், உஷா கிருஷ்னா, கிருஷ்னன் மற்றும் அருணாச்சலம் ஆகியோர் எழுப்பியிருந்தனர்.)

போக்குவரத்து நெறிசலை சமாளிப்பதற்கு ஏதுவாக பார்வையாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியும் பார்வையாளர் நேரத்தினை ஒழுங்குபடுத்தியும் போயஸ் கார்டனில் வசிக்கும் மக்களின் கருத்தினைகேட்டு நடவடிக்கை எடுக்கலாம். செம்மொழிப் பூங்கா, டி.எம்.எஸ் வளாகத்தில் காலியாக உள்ள இடங்களை வாகனங்கள் நிறுத்துவதற்கு பயன்படுத்தலாம். போயஸ் கார்டனில் உள்ள சாலைகளில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலம் ஆம்புலன் உள்ளிட்ட அவசர கால மருத்து ஊர்திகள் சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். நினைவு இல்லமாக மாற்றப்பட்ட பிறகு போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு போதுமான போக்குவரத்து காவலர்களை நியமிக்கலாம். இதன் மூலம் போயஸ் கார்டனில் வசிக்கும் மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகமல் தடுக்கலாம்.

**குடி தண்ணீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்**

(அனிதா அருண்குமார், ஆரத்தி கிருஷ்னா, கீதா ராஜா, ஜக்கி, பிரித்தி கிருஷ்னா, ரமா சந்திரமணி, ஸ்மித்தா ஷா, சுந்தரேசன், உஷா கிருஷ்ணா மற்றும் ரேகா ரங்கராஜ் ஆகியோர் இது குறித்து கேள்வி எழுப்பி இருந்தனர்)

போயஸ் கார்டனில் தற்போது உள்ள அடிப்படை வசதிகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அனுமதிக்கப்படும் பார்வையாளர்களை சமாளிப்பதற்கு போதுமானதாக உள்ளது. பார்வையாளர்களின் எண்ணிக்கையும் பார்வையாளர் நேரமும் ஒழுங்குபடுத்தப்பட உள்ளதால் இந்தப்பிரச்சனை எழுதாது. மேலும், போயஸ் கார்டன் பகுதியில் கூடுதல் மின்விளக்குகள், குப்பைகளை சேகரிப்பதற்கு கூடுதல் குப்பைத் தொட்டிகள் முதலியவையும் உறுதி செய்யப்படும். போதுமான அளவு குடி நீர் வசதியும் செய்யப்படும். பெருநகர சென்னை மாநகர பணியாளர்களால் சுத்தம் மற்றும் சுகாதார பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படும்.

**போயஸ் கார்டன் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, பொது அமைதி**

(அனிதா அருண்குமார், ஆரத்தி கிருஷ்னா, அரியனா அஸ்ராணி, ஏமண்ட் அஸ்ராணி, தீபக் அஸ்ராணி, பிரித்தி கிருஷ்னா, ரமா சந்திரமணி, ஸ்மித்தா ஷா மற்றும் சுந்தரேசன் ஆகியோர் இது குறித்து கேள்வி எழுப்பி இருந்தனர்)

வேதா நிலையம் அரசு நினைவு இல்லமாக மாற்றப்பட்ட பின்பு போதுமான பாதுகாப்பு வசதி காவல் துறையால் ஏற்படுத்தப்படும். மேலும், பார்வையாளர்களின் எண்ணிக்கையும், பார்வையாளர்களின் நேரமும் ஒழுங்கு படுத்தப்படும் என்பதனாலும் பார்வையாளர்களை சேதனை செய்தப்பின்னரே அனுமதிக்கப்படும் என்ற நிலையினாலும் பொது மக்களுடைய அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது.

**குடியிருப்பு பகுதியினை வணிகப் பகுதியாக மாற்றுதல்**

(ஆரத்தி கிருஷ்ணா, பிரித்தி கிருஷ்ணா, ரவீந்திரன், ஸ்மிதா ஷா, ரேகா ரங்கராஸ் மற்றும் நிதின் ஷா ஆகியோர் இது குறித்து தங்களின் ஆட்சேபணைகளை எழுப்பியிருந்தனர்.)

வேதா நிலையத்தினை அரசு நினைவு இல்லமாக மாற்றுவது என்பது வணிக ரீதியிலான ஒரு நடவடிக்கையன்று. மேலும், போயஸ் கார்டன் என்பது தனி நபர்களுக்கு சொந்தமான ஒரு பகுதி அல்ல. சென்னை நகரின் மற்ற குடியிருப்பு பகுதிகளை போலவே போயஸ் கார்டனும் ஒன்றாகும். மேலும், நினைவு இல்லத்தைக் காணவரும் பொது மக்களிடம் இருந்து கட்டணம் எதுவும் வசூலிக்கப்பட போவது இல்லை. முன்னாள் முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்களின் வாழ்நாள் சாதனைகளை விளக்கும் விதமாக மட்டுமே அரசு இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

**ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் ஆக்கிரமணம் மற்றும் நடைபாதை வியாபாரிகளின் தொல்லை**

(ஜக்க, மாலா சரத் சந்திரா, ரமா சந்திரமணி, கிருஷ்ணன், ரேகா ரங்கராஜ் ஆகியோர் இந்த பிரச்சனையை எழுப்பி இருந்தனர்.)

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் மயிலாப்பூர் கிராமமம், பிளாக் எண். 31, டி.எஸ் எண். 1562/2–ல் உள்ள 2205 சதுர பரப்புள்ள இடம் மேற்படி கல்லூரிக்கு அரசாணை எண். 2087 ஊரக வளர்ச்சி மற்றும் நில நிர்வாகத் துறையினால் 26.12.1975 அன்று நில மாறுதல் செய்து வழங்கப்பட்டது எனவே இதனை ஆக்ரமிப்பாக கருத இயலாது. மேலும், ஸ்டெல்லாமேரிஸ் கல்லூரி சிறுபான்மை இனத்தைச் சார்ந்த அமைப்பினால் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த நூற்றுக்கணக்கான மாணவியர்களின் நலனுக்காக நடத்தப்பட்டு வருகின்ற கல்லூரியாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்ட பிரிவு 30–ன் கீழ் இந்த கல்லூரி செயல் பட்டு வருவதால் அதனுடைய உரிமையில் அரசு தலையிட இயலாது. நடைபாதை வியாபாரிகள் குறித்த அச்சம் தேவையற்றது எனவும் அதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதுஇல்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**நினைவு இல்லத்தை வேறு பகுதிக்கு மாற்றுவது மற்றும் பிரத்தியேக தொலைக்காட்டி அலைவரிசையை வேதா நிலையத்திற்காக ஏற்படுத்துவது**

(ஜக்கி, ரமா சந்திரமணி, ஸ்மிதா ஷா, ஷோபா ராவ் மற்றும் ஆரத்தி கிருஷ்ணா ஆகியோர் இது குறித்து தங்களது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்).

போயஸ் கார்டனில் உள்ள வேதா நினைவு இல்லத்தில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக தனது இறுதி மூச்சி வரை வாழ்ந்து வந்த இடமாதலால் இதனையே நினைவு இல்லமாக மாற்றுவது பொருத்தமானதாக இருக்கும். இதைவிடுத்து வேறு ஒரு இடத்தில் நினைவு இல்லத்தினை ஏற்படுத்துவது பொது மக்களின் உணர்வுகளை புண்படுத்துவதாக அமையும். அதுபோலவே வேதா நிலையத்திற்கென பிரத்தியேக தொலைக்காட்சி அலைவரிசையை உருவாக்கி ஒளிபரப்புவது என்பதும் பொது மக்களின் உணர்வுகளுக்கு எதிரானதாக அமையும்.

**சமூகத் தாக்க மதிப்பீடு குறித்த வரைவு அறிக்கை கிடைக்கப்பெறாதது, சிறுபான்மையின மக்களின் கருத்துக்களை கேட்காதது மீண்டும் ஒரு கருத்துகேட்புக் கூட்டம் நடத்தக் கோரியது**

(ஆரத்தி கிருஷ்ணா மற்றும் சுந்தரேசன் ஆகியோர் இது குறித்து தங்களது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்).

RFCTLARR சட்டம் 2013 பிரிவு 6(1)ன் கீழும் விதி எண் 11–ன் கீழும் வகுக்கப்பட்ட அனைத்து விதிமுறைகளும் இந்நேர்வில் தவறாமல் பின்பற்றப்பட்டுள்ளன. சமூகத் தாக்க மதிப்பீடு குறித்த வரைவு அறிக்கை உரிய அலுவலரின் (மாவட்ட ஆட்சியர்) இணையதளத்தில் வெளியிடப்பட்டது மட்டும்மல்லாமல் வேதாநிலையம் அமைந்துள்ள பகுதிக்கான வார்டு மற்றும் மண்டல அலுவலகங்களிலும் வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் வெளியிடப்பட்டன. இது குறித்த பத்திரிக்கை செய்தியும் வெளியிடப்பட்டது. சமூகத் தாக்கம் குறித்த வரைவு அறிக்கையினையும் பொதுமக்கள் பார்ப்பதற்கு எந்த விதமான தடையும் இல்லை என்பதோடுமட்டும் அல்லாமல் மாவட்டஆட்சியரின் இணையதளத்திலிருந்து அதனை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. கருத்து கேட்புக் கூட்டம் நடந்த பொழுது அனைத்து தரப்பு மக்களும் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு உரிய வாய்ப்புகளும் நேரமும் வழங்கப்பட்டது. மேற்கூறிய சட்டத்தின் கீழ் இரண்டாவது முறை கருத்து கேட்புக் கூட்டம் நடத்துவதற்கு இடம் இல்லை.

**சுற்றுச்சூழல் குறித்த ஆய்வு**

(ரவீந்திரன் என்பவரால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது)

இந்த நில எடுப்பு பரப்பு முன்னாள் தமிழக முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்து மறைந்த வேதா நிலையம் இல்லத்தினை மட்டுமே உள்ளடக்கி உள்ளதால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை எனவே சுற்றுச்சூழல் குறித்த அனுமதியும் பெற அவசியம் எழவில்லை.

**பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவது**

(ரவீந்திரன் என்பவரால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது)

வேதா நிலையத்தினை புதிய நில எடுப்பு சட்டத்தின் கீழ் உரிய வழிமுறைகளை பின்பற்றி கையகப்படுத்தப்பட உள்ளதால் பொது மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவது குறித்த வினா எழவில்லை. மேலும், இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் கீழ் ஒரு பிரச்சனை குறித்து பொதுக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவது என்பது இயலாது.

**மேற்கூறிய அனைத்தையும் பரிசீலனை செய்த பின்னர் மாவட்ட ஆட்சியரின் குறிப்புரையை கீழ்கண்டவாறு இறுதி செய்கிறேன்.**

வேதா நிலையத்தினை அரசு நினைவில்லமாக மாற்றுவது என்பது தமிழக அரசால் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட முடிவு என்பதால் அது குறித்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு வழங்குவது மாவட்ட ஆட்சியரின் கடமையாகும்.

இந்தக் குறிப்புரை வழங்குவதற்கு கீழ்கண்ட ஆவணங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. சமூகத் தாக்க மதிப்பீடு குறித்த இறுதி அறிக்கை (சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லை என்பதால் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. அதே போன்று இந்த நில எடுப்பினால் பாதிக்கப்படக்கூடிய நபர்களோ, குடும்பங்களோ எதுவும் இல்லை என்பதனால் சமூகத் தாக்க மேலாண்மை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய வினாவும் எழவில்லை).
2. நில எடுப்பு அலுவலரின் அறிக்கை
3. சமூகத் தாக்க மதிப்பீடு குறித்த இறுதி அறிக்கையின் மீது நிபுணர் குழு அளித்த பரிந்துரைகள்.

**மேற்கூறிய, அறிக்கைகளை ஆராய்ந்த பின்னர் மாவட்ட ஆட்சியரின் முடிவுகளை கீழ்கண்டவாறு இறுதி செய்கிறேன்.**

1. **<u>இந்த நில எடுப்புக்கான நடவடிக்கைகள் நியாயமான காரணத்திற்காகவும் பொது நலனை கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்படுகின்றனவா ?</u>**

   மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தின் சமூக பொருளாதாரம் மற்றும் அரசியலில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர்1948–ம் வருடம் பிப்ரவரி மாதம் 24–ம் தேதி பிறந்த இவர் தனது உறுதியான கொள்கை பிடிப்பிற்காகவும் தனித்துவமான தலைமை பண்புக்காகவும் **இரும்பு மங்கை** என்று போற்றப்பட்டவர். திரைபடத்த்துறையில் இவர் பல வெற்றிகளை குவித்தவர்

இவர் கர்நாடக இசையிலும், பரதநாட்டியத்திலும், திரைப்படத்துறையிலும், எழுத்துத்துறையிலும் தடம் பதித்த பன்முகத்தன்மை கொண்ட பெண்ணாகத்திகழ்ந்தார். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த புலமைபெற்றிருந்தார்.

1982–ம் ஆண்டு அரசியலில் நுழைந்த இவர் பின்னர் அ.இ.அ.தி.மு.க கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராகவும், 1984 முதல் 1989 வரை மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தார். அப்போதைய முதல்வர் திரு. எம்.ஜி. ராமசந்திரன் அவர்கள் 1987–ல் மறைந்ததை அடுத்து இவர் இந்த கட்சியயின் பொதுச் செயலாளராக பதவியேற்று 1989–ம் ஆண்டு போடிநாயக்கனூர் சட்ட மன்ற தொகுதியில் வெற்றி பெற்று தமிழகத்தின் முதல் பெண் எதிர் கட்சித் தலைவராக ஆனார்.

1991–ம் ஆண்டு மிககுறைந்த வயதில் தமிழகத்தின் முதலமைச்சரானார். 2001 முதல் 2006 வரையிலும் பின்னர் 2011 முதல் இவர் மறைந்த நாள் வரை தமிழகத்தின் முதல்வராக திகழ்ந்தார். 6 முறை இவர் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பு வகித்துள்ளார்.

இவரது ஆட்சியில் மாணவ மாணவியர், விவசாயிகள், ஏழை எளிய மக்கள் ஆகியோருக்கென சிறப்பு திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார் அவற்றில் குறிப்பிடத்தக்கனவாக அம்மா உணவகங்கள், பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்குதல், தொட்டில் குழந்தை திட்டம், தாலிக்குத் தங்கம் திட்டம், திருமண நிதி உதவி திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், பள்ளி மாணவர்களுக்கு மடிகணினி வழங்கும் திட்டம், மிதிவண்டி வழங்கும் திட்டம், மின் விசிறி மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்தினார்.

2003 அன்றே லாட்டரி ஒழிப்பு சட்டத்தை கொண்டுவந்தார். இவரது நலத்திட்ட உதவிகள் மக்களிடையே மிகுந்த செல்வாக்கை உருவாக்கி இவருக்கு **அம்மா** என்ற நற்பெயரை ஈட்டித்தந்தது. இவர் விரைவாகவும் சமயோஜிதமாகவும் முடிவெடுப்பதில் வள்ளவர். தமிழ் நாட்டில் முதல்முறையாக 2003–ம் ஆண்டு மகளிர் கமண்டோ படையினை உருவாக்கி காட்டியவர்.

உடல்நலக்குறைவால் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் 2016–ம் வருடம் டிசம்பர் மாதம் 5–ம் தேதி மறைந்தார்.

இவரது கலை சேவையை பாராட்டி தமிழக அரசு இவருக்கு கலைமாமணி விருதினை வழங்கி சிறப்பித்தது.

ஆணாதிக்க சமூகமான இந்தியாவில் தனியொரு பெண்ணாக வெற்றிகரமாக வாழ்ந்து காட்டியவர். எனவே மயிலாப்பூர் வட்டம், மயிலாப்பூர் – 1 கிராமமம், பிளாக் எண். 31, டி.எஸ். எண். 1567/5–ல் உள்ள வேதா நிலையத்தினை நில எடுப்பு செய்வது என்பது முழுக்க முழுக்க நியாயமான காரணங்களின் அடிப்படையிலும், பொது நலன் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும்.

2. **<u>இந்த நில எடுப்பினால் ஏற்படும் பயன்கள் இதனால் ஏற்படக்கூடிய சமூகத் தாக்கம் மற்றும் பாதகமான விளைவுகளைக் காட்டிலும் சிறந்தவை.</u>**

சமூகத் தாக்க மதிப்பீடு குறித்து ஆய்வு செய்யும் முகமையும் நிபுணர் குழுவும் இந்த நில எடுப்பினால் பாதகமான நிகழ்வுகள் எதுவும் ஏற்படப் போவது இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த நில எடுப்புக்குள்ளாகும் நிலம் வீட்டிற்கான உத்தேசமான தொகை ரூ. 32,09,33,827/– ஆகும் இதில் நிலத்திற்கான மதிப்பு ரூ. 29,33,23,320/– போக எஞ்சியுள்ள மதிப்பு ரூ. 2,76,10,507/– கட்டிடத்திற்கான மதிப்பாகும்.

இந்த நில எடுப்புக்குத் தேவைப்படும் பூர்வாங்கத் தொகை மேற்கூறிய ரூ. 32,09,33,827/– ஆகும். இந்த திட்டத்தினால் ஏற்படும் பலன்களும் பொது நலனும் இந்த திட்டத்திற்கான செலவினை நோக்கும் போது பொருத்தமான தொகையே ஆகும்.

3. **<u>மிகவும் குறைந்தபட்ச நிலபரப்பே இந்த நில எடுப்பில் நோக்கத்திற்கு தகுந்தவாரே உள்ளதா</u>**

நில எடுப்புக்குள்ளாகும் மயிலாப்பூர் –1 கிராமம், பிளாக் எண் 31, டி.எஸ் எண். 1567/50–ல் உள்ள 10 கிரவுண்டு 322 சதுர அடி நிலம் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான மிகவும் குறைந்த நிலப்பரப்பாகும்.

4. **<u>ஏற்கனவே நில எடுப்பு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் உபரி நிலங்கள் எதுவும் உள்ளனவா</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் உபரி நிலங்கள் இருப்பினும் அந்தப்பகுதிகளில் நினைவு இல்லம் ஏற்படுத்துவது என்பது பொது மக்களின் உணர்வுகளுக்கு எதிரானதாக அமையும். எனவே மயிலாப்பூர் –1 கிராமம், பிளாக் எண் 31, டி.எஸ் எண். 1567/50–ல் உள்ள 10 கிரவுண்டு 322 சதுர அடி நிலம் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான மிகவும் குறைந்த நிலப்பரப்பாகும்.

இந்த நில எடுப்பினால் பாதிக்புக்குள்ளாகும் குடும்பங்கள் எதுவும் இல்லை. எனவே, அவர்களை அப்புறப்படுத்துவதோ, மறு குடியமர்த்துவதோ மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவோ எந்த அவசியமும் ஏற்படவில்லை. இந்த நிலஎடுப்பு பரப்புக்குள்ளாகும் பகுதி முடக்கப்பட்டுள்ளது குறித்து வருமான வரித்துறை நீதிமன்றத்தில் உறுதி ஆவணம் தாக்கல் செய்துள்ளது. மேலும், மறைந்த முதல்வரின் வாரிசுதாரர்களாக தங்களை அறிவிக்கவேண்டும் என தீபா மற்றும் தீபக் ஆகிய இருவர் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, நில எடுப்புக்கான இழப்பீட்டுத் தொகை மேற்படி வழக்குகளை கருத்தில் கொண்டு நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுவிடும்.

இந்த நில எடுப்பு நடவடிக்கைக்கு உள்ளாகும் பகுதி வேதா நிலையம் மட்டுமே என்பதனால் போயஸ் கார்டனில் உள்ள இதர பகுதிகளுக்கும் வீடுகளுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது. மேலும், வேதா நிலையத்தில் சிறிய அளவிலான மாற்றங்கள் மட்டுமே செய்யப்படும் என்பதனால் எவருக்கும் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்பட போவது இல்லை.

வேதா நிலையத்தை தவிர்த்து நகரத்தின் வேறு பகுதியில் இந்த நினைவு இல்லத்தை அமைப்பது என்பது அரசின் கொள்கை முடிவுக்கு எதிரானதாக அமையும். மேலும், இதனால் பொது மக்களின் உணர்வும் பாதிக்கப்படும்.

இந்த நில எடுப்பினால் பாதிக்கப்படக்கூடிய நபர்களோ, குடும்பங்களோ எவரும் இல்லை என்பதனால் பாதகமான சமூகத் தாக்கம் என்ற வினா எழவில்லை.

இந்த நில எடுப்பு நடவடிக்கையால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதுஇல்லை என்பதானாள் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வு மேற்கொள்வதற்கான அவசியம் எழவில்லை.

இந்த நில எடுப்பு நடவடிக்கையால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களோ, நபர்களோ எவரும் இல்லை என்பதனால் சமூகத் தாக்க மேலாண்மை திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டிய அவசியமும் எழவில்லை.

போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு டி.எம்.எஸ் மற்றும் செம்மொழிப் பூங்கா வளாகங்களில் உள்ள காலி இடங்களை வாகனங்கள் நிறுத்துவதற்கு பயன்படுத்திக்கொள்ளாம். செம்மொழிப் பூங்கா பகுதியில் உள்ள 33 கிரவுண்டு காலி இடத்தில் 30 பேருந்துகளும், 60 சிற்றுந்துகளையும் ஒரே சமயத்தில் நிறுத்துவதற்கு போதுமான இடவசதி உள்ளது. அதே போன்று டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள காலி இடங்களில் 60 சிற்றுந்துகள் வரை நிறுத்துவதற்கு போதிய இட வசதி உள்ளது.

கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஆன்லைன் வசதி மூலம் பார்வையாளர்கள் முன்பதிவு செய்து பார்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்திருப்பதை போல போயஸ் கார்டனிலும் ஆன்லைன் மூலம் பார்வையாளர்களை பதிவு செய்து அனுமதிப்பதால் போக்குவரத்து நெரிசலை எளிதாக சமாளிக்கலாம்.

மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழகம் மற்றும் அல்லாது இந்தியா முழுவதும் உள்ள பெண்களுக்கு ஒரு முன்மாதிரியான தலைவராகவும் ஆணாதிக்கம் மிகுந்த சமூகத்தில் ஒரு பெண் எந்த அளவுக்கு வெற்றிகரமாக செயல்பட முடியும் என்பதற்கும் எடுத்துக்காட்டாக திகழ்வதால் அவர்

வாழ்ந்து மறைந்த வேதா நிலையத்தினை அரசு நினைவு இல்லமாக மாற்றுவது என்பது முற்றிலும் பொருத்தமான ஒரு நடவடிக்கையாகும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்

சென்னை